முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 746**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**14.10.2021**, வியாழக்கிழமை

1. ஓங்கார சக்தியே அரங்காபோற்றி
ஓங்கார சூட்சும வடிவேபோற்றி
ஓங்காரன் என் அம்சமான ஞான தேசிகனே போற்றி
உயர்வாக அரங்கன் நீ கேட்க இனிதே
2. இனிதே சுப்ரமணியர் யானும்
இயம்பிடுவேன் ஞான அறிவுரை ஆசி தன்னை
தயவான அரங்கன் கொள்கையே உலகை மாற்றி
தர்மலோகமாக்கி பெரும் பாதுகாப்பு தந்தருளும்
3. அருளவே அரங்கனை தொடர்ந்துவரும் ஞானப்படைகள் மூலமாகத்தான்
அகிலத்தில் மேலும் மேலும் அற்புதங்கள் கூடி
வகைபட உலகமாற்றம் நடந்தேறும்
வடிவேலன் என் ஞான ஆட்சி மலரும்
4. மலரவே அற்புதங்கள் நடக்கவே
மாதவசி காட்டுகின்ற உண்மை நெறியை
தளர்வில்லா உலகோர் பின்பற்ற வேண்டும்
தடையின்றி அரங்கன் தர்மத்தை செய்துவரவேண்டும்
5. வேண்டிவேண்டி எந்தன் வழிபாட்டை
விடாது உலக மக்கள் செய்துகொண்டுவர
தொண்டுவழி அரங்கன் தொடர்பில் கூட
தேசிகன் வழி என்னருள் பரிபூரணமாகி
6. ஆகியே உலகோர்க்கு ஞானசித்தி அழியாமை என்கின்ற பிறவா பெரும் சித்தியும் உண்டாகும்
ஆகவே அரங்கனை தொடர்ந்து வர அகிலத்தார்க்கு மாற்றம் உண்டு
மிகைபட செய்யும் தர்மத்தாலே
மண்ணுலகம் காக்கப்படும் என்று கூறி
7. கூறியே அரங்கனுள் யானிருக்க
குருராஜன் ஆசிபெற்ற மக்களெல்லாம்
ஆறுமுகன் என் ஆசிபெற்ற மக்களாகி
அழியாமை இந்த கலியுகத்தில் பெற்று
8. பெற்றுமே பேருலக மாற்றத்தில்
பெரும்பங்கு அவரவரும் கண்டு இனிதே
ஆற்றல்பட ஞான ஆட்சி மலரும் காலம்
அனைவருக்கும் வாழும் வாய்ப்பு சிறப்பு யோகம் கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—